www.padippakam.com

# சிறுவர் அமுதம்

17.8.92

ஆவணி 92

கிண்ணம் 3 எண்ணம் 8

24/08/92



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

**KINDERFREUNDLICHES MAGAZIN**

படிப்பகம்

www.padippakam.com

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்,
வயிரமுடைய நெஞ்சு வேண்டும் - இது
வாழும் முறைமையடி பாப்பா!



மகாகவி சுப்பிரமணிய பாரதி

அன்புச் சிறுவர்களே,

இங்கிலாந்தில் கணேஸ் என்ற தமிழ்ச் சிறுவன் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள் என நினைக்கின்றேன். 13 வயதுச் சிறுவனான கணேஸ் தனது படிப்பினால் தனது இனத்திற்கு உலக அரங்கில் பெருமை தேடித் தந்திருக்கின்றான். தனது பெற்றோரைத் தனது திறமையால் மகிழ்ச்சி கொள்ள வைத்திருக்கின்றான். கணேஸைச் சிறுவர் அமுதமும் வாழ்த்துகின்றது.

உலகிலே மிகக் குறைந்த வயதில் பட்டதாரியான இரண்டாவது ஆளாக உள்ள கணேஸ் இங்கிலாந்தின் ஆசியாவின் முதலாம் ஆளாக உள்ளது குறிப்பிடத் தக்கது. கணேஸ் உலக அரங்கில் கௌரவிக்கப் பட்டது, சிறுவன் என்ற ரீதியிலும் தமிழன் என்ற ரீதியிலும் இரட்டிப்பான மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றது.

கணேஸ் தனது படிப்பின் மூலம் தமிழினத்திற்குப் பெருமை தேடித் தந்தது போல தனது படிப்பையும் தனது திறமைகளையும் தமிழினத்திற்குப் பயன் படுத்த வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளைச் சிறுவர் அமுதம் விடுக்கின்றது.



படிப்பகம்

தாயகத்தை விட்டு வெளியேறிய தமிழ்ச் சிறுவர்களுக் கெல்லாம் கணேசின் இந்தச் சாதனை ஒரு தூண்டுகோலாக அமையும் என்பது உண்மை. யாராலும் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தைக் கைவரப் பெற்ற கணேஸ் தமிழர்களுக்கோர் உயர்ந்த இடத்தைத் தந்திருக்கின்றான். தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயாகச் சிறுவர் அமுதமும் பூரிப்படைகின்றது.

அன்புடன்
ஆசிரியர் சிறுவர் அமுதம்


சிறுவர் விழா 19.9.92

சிறுவர் விழாவை முன்னிட்டு நடாத்தப் படும் பேச்சுப் போட்டியில் 14 வயதிற்கு மேற் பட்டவர்கள் தங்களுக்குச் சந்தர்ப்பம் தர வேண்டும் என்று கேட்டுள்ளனர். 16 - 14 வயதிற்கு இடைப் பட்டவர்களும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளலாம். நான் விரும்பும் பெரியவர் என்ற தலைப்பில் விரும்பும் பெரியவர் ஒருவரைப் பற்றிப் பேசலாம்.

10 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எங்கள் தமிழ் மொழி என்ற விடயத்தைப் பற்றி அல்லது நான் வளர்ந்து... என்ற விடயத்தைப் பற்றிப் பேசலாம். இந்த இதமுடன் இணைக்கப் பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை நிரப்பி அனுப்பவும்.

விழா நிகழ்ச்சி நிரலும் விழா மண்டபத்தை அடைகின்ற வழி விபரமும் செப்டம்பர் முதல் வாரத்திற்கு முன்னர் எல்லோருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

# அப்பாவும் மகளும்



அப்பாவும் மகளும்


மகள் : அப்பா, பாலைவனங்களில் பிரயாணம் செய்ய ஒட்டகந்தான் ஏற்றதென்று கூறுகின்றார்களே, அதற்குக் காரணம் என்ன?

அப்பா : மகளே, பாலைவனம் என்பது ஒரே மணல் வெளி என்பது உனக்குத் தெரியும். அங்கே பாதைகள் அமைக்கக் கூடிய மண்ணும் கல்லும் இல்லை. எனவே பாலைவனத்தில் பாதைகள் இல்லாததால் வாகனங்களில் பிரயாணம் செய்ய முடியாது. குதிரையில் போகலாம் என்றால் பாலைவனத்து வெப்பத்தைக் குதிரையினால் தாங்கிக் கொள்ள முடியாது. அதை விடக் குதிரைக்குத் தேவையான நீரும் புல்லும் பாலைவனத்தில் கிடைக்க மாட்டாது.

ஆனால், ஒட்டகமோ பாலைவனத்திற்கென்று படைக்கப் பட்ட மிருகமாகவே இருக்கின்றது. அதன் கண்ணிமை மிக நீளமானதாக இருக்கின்றது. இதனால் வெப்பத்தையும் வெளிச்சத்தையும் தாங்கிக் கொள்ள முடிகின்றது. பாலை வனத்தில் அடிக்கடி வீசும் காற்றினால் மேல் எழும் மணல் மூக்கினுள் சென்று விடாதபடி மூக்குத் துவாரங்களை மூடிக் கொள்வதற்கு ஏற்றதாக ஒட்டகத்தின் மூக்கு அமைந்திருக்கின்றது.

www.padippakam.com





ஒட்டகத்தை விசம் வைத்துக் கொல்ல முடியாது. பாலைவனத்தில் கிடைக்கும் முட் செடிகளைத் தின்பதற்குத் தகுந்ததாக ஒட்டகத்தின் வாயிம் பற்களும் அமைந்துள்ளன. பாலை வனத்தில் நீர் கிடையாது. ஒட்டகம் நீர் இல்லாமல் நீண்ட நாட்களுக்கு வாழக் கூடியது. அப்படி நீரும் உணவும் இல்லாமல் வாழும் வேளையில் அதன் திமிலில் சேகரிக்கப்பட்டுள்ள கொழுப்பு உணவாகப் பயன்படுகின்றது. ஒட்டகத்தின் வயிற்றில் ஒரு கிழமைக்குத் தேவையான நீரைச் சேமித்து வைக்க முடியும்.

இந்தக் காரணங்களினாலே பாலைவனப் பிரயாணத்திற்கு ஒட்டகத்தைப் பயன் படுத்துகின்றார்கள் மகளே.



படிப்பகம்



மகள் : அப்பா, எந்த உலோகத்தையாவது கத்தியினால் வெட்ட முடியுமா?


அப்பா : மகளே, அனேகமான உலோகங்கள் எல்லாம் கடினமான பொருட்கள் தான். நாம் தினந் தோறும் காணும் எந்த உலோகத்தையும் கத்தி கொண்டு வெட்டி விட முடியாது.

நாம் தினந் தோறும் உபயோகிக்கும் உப்பு இருக்கின்றதே அது தங்கம் வெள்ளி போன்ற கடினமான உலோகமும் அல்ல! தனி ஒரு பொருளுமல்ல! சோடியம், குளோரின் என்ற இரண்டு தனிப் பொருட்களின் கூட்டுப் பொருளாகும். சோடியம் ஓர் உலோகம். குளோரின் ஒரு வாயு (காற்று). இரண்டும் விசம். சாப்பிட முடியாதவை. ஆனால் இந்த இரண்டும் சேர்ந்ததும் எமக்குக் கட்டாயம் தேவையான பொருளாகி விடுகின்றது.

இந்தச் சோடியம் என்னும் உலோகம் ஏனைய உலோகங்களைப் போல கடினமாதல்ல. இலகுவானதாக இருக்கும். இதைக் கத்தியால் எளிதில் வெட்டி விட முடியும். பொட்டாசியம் என்றொரு உலோகமும் கத்தியால் வெட்டி விடக் கூடிய மற்றொரு உலோகமாகும். இது சோடியம் இனத்தைச் சேர்ந்தது. பொட்டாசியம் சேர்ந்த உப்பும் நமது உடம்புக்குத் தேவையானதே.



# அவுஸ்திரேலியாவின் பழங்குடிகள்




அவுஸ்திரேலியாவின் பழங்குடி மக்கள் ஏறக் குறைய நாற்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து சென்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவர்கள் திராவிடர் என்பதற்கான சான்றுகள் அதிகம் கிடைத்துள்ளன.

18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் அவுஸ்திரேலியாவை அடைந்த போது இவர்களைக் கண்டு அப்போறிஜின் என அழைத்தனர். இதன் பொருள் பழங்குடிகள் அல்லது பூர்வீக குடிகள் என்பதாகும். ஆங்கிலேயர் அவுஸ்திரேலியாவை அடைந்த போது மூன்று லட்சத்திற்கும் அதிகமாக இருந்த இந்தப் பூர்வீக குடிகள் இன்று மிக மிகக் குறைவாகவே உள்ளனர். பெரும்பாலானவர்கள் நகர வாழ்க்கைக்கு மாறி விட்டார்கள். சில ஆயிரம் பேர் இன்றும் இயற்கையுடன் இணைந்த பழைய காட்டு வாழ்க்கையே வாழுகின்றார்கள்.

மிருகங்களை வேட்டையாடுவதும் கிழங்கு வகைகளை உணவாக உண்பதுமான ஒரு வித இயற்கை வாழ்க்கை வாழ்ந்தாலும் இவர்களின் சடங்குகளும் சம்பிரதாயங்களும் மிக மிகப் பழங்காலத் தன்மை கொண்டனவாக உள்ளன.

www.padippakam.com



இவர்களின் சடங்குகளில் ''கனவுகாலம்'' என்பது முக்கிமானதாகும். இந்தக் கனவுகாலம் என்பது, தமது முதாதையரே மிருகங்கள், செடிகள், மனிதர்கள் என்றுள்ள எல்லாவற்றையும் படைத்தார்கள். இதைத் தங்களின் சந்ததி சந்ததியாகச் சொல்லி ஆனந்தக் கூத்தாடுவதாகும். இதற்கென்று பாட்டுக்கள் நடனங்கள் என்று விதம் விதமாக உள்ளன. தமது உடல் முழுவதும் களிமண்ணினால் பூசிக் குறிகள் வைத்துக் கொள்ளுவார்கள்.

ஆங்கிலேயர் குடியேறியதும் இந்தப் பழங்குடிகளை எவ்வளவிற்கு அழிக்க முடியுமோ அவ்வளவிற்கு அழிக்கத் தொடங்கினார்கள். நகரங்களில் வாழத் தொடங்கியவர்கள் தமது



படிப்பகம்

உறவினரைத் தொடவோ கதைக்கவோ முடியாமல் சட்டங்கள் போட்டார்கள். நகரங்களில் வாழத் தொடங்கியவர்கள் தமது பழைய கலை கலாச்சாரச் சடங்குகளைச் செய்ய முடியாமல் தடை செய்தார்கள். இவர்களுக்கு அரசாங்கம் சில உதவிகளைச் செய்தாலும் ஆங்கிலேயர் அளவிற்குச் சலுகைகள் இல்லை. இன்று நகரங்களில் வாழுவோர் தங்கள் கலை கலாச்சாரங்களைக் கொண்டாட வேண்டும் என்று குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

காட்டு வாழ்க்கை வாழுவோர் நகர்ப் புறங்களுக்கு வர முடியாது. காட்டில் வாழுவோரை அழிக்க நோய்க் கிருமிகளை அரசாங்கம் பரப்பியது. இவர்களுக்கு எந்த விதமான மருத்துவ வசதியும் கிடையாது. ஓர் இனத்தை அழிப்பதற்கு வேண்டிய அனைத்து வழிகளையும் அவுஸ்திரேலியா அரசு இந்தப் பழங்குடிகள் மீது பிரயோகித்து வந்தது. வருகின்றது.



இந்தப் பழங்குடிகள் வைத்திருக்கும் ஒரு கருவியை எறிந்தால் அது எதிரியையோ விலங்கையோ தாக்கி விட்டுத் திரும்பவும் எறிந்தவரிடமே வந்து சேரக் கூடியது. அவுஸ்திரேலியாவில் ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள இந்தப் பழங்குடிகளின் நிலங்களைப் பறித்தார்கள். பிள்ளைகளைக் கல்வி கற்கவென்று பெற்றோரிடமிருந்து பிரித்தெடுத்தனர். இப்டியாகப் பல வழிகளிலும் சொந்த நாட்டு மக்களை வந்தேறிய குடிகள் அடக்கி அதிகாரம் செய்வதை இந்தப் பூர்விக குடிகளிலிருந்தும் அறிய முடிகின்றது. ✷

## களிமண்

ஏதாவது பிழை செய்து விட்டால் ''என்ன தலைக்குள் களிமண்ணா?'' என்று திட்டுவார்கள். இதன் பொருள் மூளை இல்லை என்பதாகும். ஆனால் இன்று அபாரமான திறமை ஞாபகசக்தி இருந்தால் மட்டுமே ''என்ன தலைக்குள் களி மண்ணா?'' என்று கேட்க வேண்டும் போல காலம் மாறி விட்டது.

கம்பியூட்டர் என்ற கணனியை இயக்குகின்ற மிக முக்கிய பொருளான 'சிலிக்கா' களி மண்ணிலிருந்தே பெறப்படுகின்றது. இனிமேல் யாராவது இப்படித் தலைக்குள் களி மண்ணா என்று கேட்டால் சந்தோசப்படலாம். இந்தச் சிலிக்கா அரிசியின் தவிட்டிலும் அதிகமாக உள்ளது. இது தான் கம்பியூட்டருக்குத் தேவையான அடிப்படையான பொருளாகும். ✷

www.padippakam.com



## தன்னால் இயன்றதை இல்லை எனலாகாது.

## (கர்ணன் கதை)

மாயக் கண்ணன் ஓர் அந்தணர் வேடத்தில் துரியோதனனிடம் சென்றார். அரசே, நான் யாகம் செய்யப் போகின்றேன். அதற்கு வேண்டிய விறகு தருவாயா? என்று கேட்டார். அதற்குத் துரியோதனன் தருகின்றேன் என்று சொல்லி விட்டான்.

சில நாட்கள் சென்றன. மீண்டும் கண்ணன் அந்தணர் வடிவத்தில் துரியோதனனிடம் சென்றார். முன்னர் வாக்களித்தது போல யாகத்திற்கு விறகு தருமாறு கேட்டார். அப்போது மழைக் காலம். ஏழு



படிப்பகம்

www.padippakam.com

நாட்கள் தொடர்ந்து மழை பெய்திருந்தது. ஊரில் விறகுத் தட்டுப்பாடாக இருந்தது. ''அந்தணரே! விறகு இல்லை. நான் என்ன செய்வேன்? என்று துரியோதனன் கேட்டான். தன்னால் விறகு தர முடியாதென்று சொன்னான்.

கண்ணன் கர்ணனிடம் சென்றார். கர்ணன் கொடையில் சிறந்தவன். யார் எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் வாரி வழங்கும் பெருங் குணமுள்ளவன். அந்தணர் வடிவத்தில் சென்ற கண்ணன் தனக்கு யாகம் செய்ய விறகு தேவைப் படுவதாகக் கர்ணனிடம் கூறினான். அங்கும் விறகில்லை. ஆனால் தன்னிடம் வந்தவரிடம் இல்லை என்று சொல்லக் கர்ணன் விரும்பவில்லை.

உடனே தனது வீட்டிற்குள் நுழைந்த கர்ணன் வீட்டின் பின் புறத்தைப் பிரித்து விறகு எடுத்தான். அதை அந்தணர் வடிவில் வந்த கண்ணனிடம் கொடுத்தான். கர்ணனின் கொடைத் தன்மையால் எவருக்கும் கிடைக்காத பெருமையும் புகழும் கர்ணன் ஒருவனுக்கே கிடைத்தது. கொடையில் சிறந்தவன் கர்ணன் என்று எல்லோரும் கர்ணனைப் புகழ்கின்றனர். ✱

இந்த இதழில் இடம் பெற்றுள்ள பொதறிவு விடயங்கள் யாவையும் தொகுத்து அனுப்பியவர்.
கி.ரவீந்திரன் CH.8117 FALLANDEN SCHWEIZ



படிப்பகம்

www.padippakam.com

# முல்லா கதைகள்





ஒரு முறை ஞானி ஒருவருடன் ஏதோ விடயமாக வாதாட முல்லா சம்மதித்தார். குறிப் பிட்ட நாளில் ஞானி முல்லா வீட்டிற்கு வந்தார். ஆனால் முல்லா அங்கே இல்லை. முல்லா வருவார் என்று ஞானி நீண்ட நேரம் காத்திருந்தார். முல்லா வரவில்லை. ஞானிக்கு முல்லா மீது ஆத்திரமாக இருந்தது. ஒரு சுண்ணாம்புக் கட்டியை எடுத்து முல்லாவின் வீட்டுக் கதவில் ''முட்டாள் கழுதை'' என்று எழுதிவிட்டு ஞானி சென்று விட்டார்.



படிப்பகம்



சிறிது நேரத்தின் பின்னர் முல்லா; வீட்டிற்கு வந்தார். கதவில் எழுதியிருந்ததைப் படித்தார். ஞானி வந்து காத்திருந்ததையும் பின்னர் கதவில் எழுதிச் சென்றதையும் முல்லா தனது மனைவி மூலம் அறிந்தார். உடனே ஓட்டமும் நடையுமாக ஞானியின் வீட்டிற்குச் சென்றார். முல்லா அவசரம் அவசரமாக வருவதை ஞானி கண்டார். தான் கதவில் எழுதியதற்கு முல்லா பேசப் போகின்றார் என்று பயந்தார். முல்லா ஞானியிடம் வந்ததும். ''தத்துவ ஞானியே தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். உங்களுடன் வாதாடுவதற்குச் சம்மதித்து விட்டு மறந்து விட்டேன். அது பெரிய தவறுதான். தாங்கள் வந்ததைத் தெரிவிக்கக் கதவில் தங்களுடைய பெயரை எழுதி வைத்திருந்தீர்கள். அதைப் பார்த்ததுமே தாங்கள் வந்ததை அறிந்து கொண்டேன். அது தான் உங்களை வரச் சொல்லி விட்டு ஏமாற்றியதற்கு மன்னிப்புக் கேட்க வந்தேன்'' என்று முல்லா கூறினார். ஞானி தலை கவிழ்ந்தபடி நின்றார்.

*



(இன்னும் வரும்)

www.padippakam.com

# உலக அதிசயங்கள்

## கொலியஸ்

## அப்பலோ சிலை

உலக அதிசயங்களில் ஒன்றான கொலியஸ் என்று அழைக்கப்படும் அப்பலோ சிலை ஐம்பத்தாறு ஆண்டுகளே இருந்தது.

கிரேக்க நாட்டில் ரோடே தீவு உள்ளது. அங்கு வாழ்ந்த ரோடேய மக்களே இந்தச் சிலையை நிறுவினார்கள். இந்தச் சிலையைச் செய்வதற்குக் காரணம் இல்லாமலில்லை.

கிறிஸ்த்து பிறப்பதற்கு 312 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து நாட்டைத் தாலமி என்பவன் ஆண்டு வந்தான். தாலமிக்கும் மாசிடோனியா அரசனுக்கும் போர் மூண்டது. ரோடே தீவு மக்கள் தாலமிக்கு ஆதரவாகப் படைகளை அனுப்பிப் போர் செய்தார்கள். மாசிடோனியா அரசன் போரில் தோல்வி கண்டான். ஆனால் தனக்கெதிராகத் தாலமிக்காகப் படை அனுப்பிய ரோடே மக்கள் மீது தீராத ஆத்திரம் கொண்டான். ரோடே மக்களைப் பழி வாங்கச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தான்.



படிப்பகம்

ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் தாலமிக்கும் மாசிடோனியாவுக்கும் போர் ஏற்பட்டது. இந்த முறை எகிப்தைத் தாக்காமல் அவர்களுக்கு உதவி செய்த ரோடே தீவை மாசிடோனியர் தாக்கினார்கள். ரோடே மக்கள் எதிர்பாராமல், தாக்கப் பட்டதால் திக்கு முக்காடினார்கள். தனக்கு உதவி செய்த ரோடே தீவு மக்களுக்காகத் தாலமி பெரும் படையை அனுப்பிக் காப்பாற்றினான். தாலமியின் படை உதவி கிடைத்ததால் ரோடே மக்கள் பெரும் வெற்றி பெற்றனர்.

இந்த வெற்றியை நினைவுச் சின்னம் வைத்துக் கொண்டாட ரோடே மக்கள் விரும்பினார்கள். அதற்கு, எதிரிகள் விட்டுச் சென்ற ஆயுதங்களை உருக்கியே சிலை செய்வதாகக் கலைஞன் சேரே என்பவன் கூறினான். இவன் கலைஞன் மட்டுமல்ல! சிறந்த போராளியும் ஆவான். எதிரிகள் விட்டுச் சென்ற ஆயுதங்களைச் சேகரித்து உருக்கி இந்த அப்பலோ சிலையை அமைத்தான்.

இந்தச் சிலையைச் செய்து முடிக்கப் 12 ஆண்டுகள் சென்றன. சிலையின் வேலை முடிந்தது. அது கம்பீரமாகக் காட்சி தந்தது. ஆனால் இதனைச் செய்த கலைஞனுக்கு இந்தச் சிலையின் கலை அம்சத்தில் ஏதோ சிறுகுறை இருப்பதாகவே மனம் உறுத்தியது. இதை அந்தக் கலைஞனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. முடிவு? தற்கொலை செய்து கொண்டான்.

www.padippakam.com



ஐம்பத்தாறு
ஆண்டுகளின் பின்னர்
ஏற்பட்ட பூமி நடுக்கம்
இந்தச் சிலையைக் கீழே
விழுத்தி விட்டது. கடல்
மணலில் தலை கவிழ்ந்து
கிடந்தது.

இதன் பின்னர் பல ஆண்டுகள் இந்தச் சிலை கவனிப்பாரற்றுக் கிடந்தது. கிறீஸ்த்து பிறந்து 672-ஆம் ஆண்டில் ரோடே தீவை அரேபியர் கைப்பற்றினார்கள். கடற்கரையில் கிடந்த இந்த வெண்கலச் சிலையை உடைத்துப் பணமாக்கத் தொடங்கினார்கள். 900 ஒட்டகங்களில் இந்தச் சிலை துண்டு துண்டாகப் பட்டு மூடைகளில் அரேபியாவுக்குக் கொண்டு செல்லப் பட்டது.

கிரேக்க மக்கள் சூரியனை அப்பலோ என்றும் ரோடே மக்கள் சூரியனை கொலியஸ் என்றும் வழங்குவர். இந்தச் சிலையை அப்பலோ கொலியஸ் என்று அழைத்தனர்.



படிப்பகம்


# குறுக்கெழுத்துப் போட்டி 2 முடிவுகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தா | தி | ச | ண் | 7 |
| து | தா | 10 | ம | ந் | த | ம் |
| கா | ம் | ல | 18 | தை | 20 | ன |
| ப் | 23 | ம் | ஆ | 26 | 27 | கி |
| பு | ளி | 31 | ண் | 33 | அ | டி |
| 36 | ள் | ஞ | வ் | வ | ண் | 42 |
| ரி | கி | 45 | தி | வை | வ | ண் |

உங்களால் முடியுமா?

கீழேயுள்ள பெட்டிக்குள் நூறுக்குக் குறைந்த எண்களால் நிரப்புங்கள். எங்கேயும் எந்த எண்ணையும் எழுதலாம். ஆனால், எந்தப் பக்கம் பெருக்கினாலும் மொத்தம் ஆயிரம் வர வேண்டும். பெருக்க ஆயிரம் வந்தால் விடையை எழுதிச்சிறுவர் அமுதம் முகவரிக்கு அனுப்புங்கள்.

கி. ரவீந்திரன்
சுவிஸ்




## புதிர்

உங்களால் முடியுமா?

------------------

www.padippakam.com



# உலகைச் சிரிக்க வைத்த சார்லி சாப்ளின்

தம்பி சார்ளிக்குத் தண்டனை வழங்கப் பட்டது அண்ணன் சிட்னிக்குத் தெரியாது. எப்படியோ கேள்விப்பட்டு ஓடோடி வந்து தம்பியைக் கட்டிப் பிடித்து அழுதான். அண்ணனும் தம்பியும் ஒரே விடுதியில் இருந்தாலும் இருவரும் சந்தித்துக் கொள்வது மிகவும் குறைவு. சந்தர்ப்பம் கிடைக்கும் போது சிட்னி பாணுக்கு வெண்ணெய் பூசிக் கொண்டு வந்து சார்லிக்குக் கொடுப்பான். விடுதிச் சாப்பாடு குறைவாகக் கிடைப்பதால் சார்லிக்கு அண்ணன் கொண்டு வரும் பாண் துண்டுகள் மகிழ்ச்சியைத் தந்தது. இந்தச் சொற்ப மகிழ்ச்சியும் நீண்ட நாள் நிலைக்கவில்லை.

பதினொரு வயது வந்ததும் அனாதை விடுதியில் உள்ள சிறுவர்கள் கடற் படைப் பயிற்சிக்குச் செல்ல வேண்டும் என்பது விடுதியின் சட்டமாக இருந்தது. சிட்னிக்குப் பதினொரு வயது வந்தது. அவன் கடற் படைப் பயிற்சிக்குச் சென்று விட்டான். இருந்த ஓர் ஆறுதலான அண்ணனையும் சார்லி பிரிய வேண்டி வந்தது. இதை நினைத்து நினைத்துச் சார்லி அழுவான். இந்த அழுகை போதாதென்று சார்லிக்குப் புதுப் பிரச்சினை வந்து அழ வைத்தது.



படிப்பகம்

www.padippakam.com



சார்லிக்குத் தலை முடி சுருளாகவும் அழகாகவும் இருந்தது. ஆனால் தலையில் புண் வந்து முடி முழுவதையும் மழித்து விட்டு மொட்டந் தலையில் அயோடின் பூசிக் கொண்டிருக்க வேண்டி வந்து விட்டது. சுருள் முடியை இழப்பது, அயோடின் பூசிக் கொண்டிருப்பது, மொட்டந் தலையைப் பார்த்து ஏனைய சிறுவர்கள் செய்த கிண்டலும் கேலிகளும், தலைப் புண் மற்றவர்களுக்குத் தொற்றி விடலாம் என்று சார்லி தனிமைப் படுத்தப்பட்டது, இவை எல்லாம் சார்லிக்குத் தீராத அழுகை அழுகையாக இருந்தன.

ஒரு முறை தாயார் அன்னா சார்லியைப் பார்க்க விடுதிக்கு வந்தார். விடுதியில் மொட்டந் தலையும் அழுக்கான ஆடையுடன் குளிப்பு முழுக்கில்லாமல் நின்ற சார்லியைப் பார்க்கத் தாயாருக்கு அழுகை வந்தது. ''நீ எப்படி என்றாலும் எனக்குப் பிள்ளைதானே?'' என்று தாயார் சொல்லிக் கட்டிப் பிடித்து அழுதார். சார்லியை விடுதியிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

தாயார் சார்லியின் அப்பாவிற்கு எதிராகப் போட்ட வழக்கில் குழந்தைகளை அப்பாவே வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. சார்லி தந்தையோடு வாழ அண்ணன் சிட்னியுடன் சென்றான். அங்கே பெரும் பயங்கரம் காத்திருந்தது. அது சட்டிக்குள்ளிருந்து தப்பி அடுப்பிற்குள் விழுந்த கதையாக இருந்தது. ✳

(இன்னும் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வினாவிடை

1) கூட்டன்பேர்க் அச்சியந்திரம்
2) பனை வடலி
3) புலி உறுமும்
4) இந்தியா புதுடெல்லி
5) விம்பிள்டன் இங்கிலாந்து
6) பாரதியார் புதிய ஆத்திசூடி

விடுகதைப் போட்டி ஆடி92

---

1) மழைத்துளி
2) மூக்குத் துவாரம்
3) கடல் அலை
4) கூட்டுப்புழு
5) பரிதி

சரியான விடைகளை எழுதியவர்களும் ஆக்கங்களை அனுப்பி வைத்தவர்களும் 21/22/23 /24-ஆம் பக்கங்களுக்கு வரவும். ஒவ்வொரு போட்டிகளிலும் சரியான விடைகளை அனுப்பி வைத்தவர்களும் ஆக்கங்களை அனுப்பி வைத்தவர்களும் குறிக்கப்பட்டுள்ளனர். சரி ( ✓ ) அடையாளம் உங்களைக் காட்டுகின்றது.



படிப்பகம்

| | கையெழுத்துப் போட்டி | வினாவிடைப் போட்டி | விடுகதைப் போட்டி | ஆக்கம் |
|---|---|---|---|---|
| செல்வி. கேமா செல்வராஜா 5650 Solingen 19 | ✓ | ✓ | | |
| செல்வி. சுஜாதா பாலச்சந்திரன் 6633 Wadgassen | ✓ | ✓ | | |
| செல்வி. ஜெய்பிரபா தியாகேஸ்வரன் 4630 Bochum 7 | | ✓ | | |
| செல்வி. ஜெகதா தர்மராஜா 6601 Bischmisheim/saar | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. துசியா சத்தியசெல்வன் 6612 Schmelz | | ✓ | | |
| செல்வி. உமாகங்கா இரத்தினம் 4050 Monchengladbach | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. லாவண்யா பாலேந்திரன் 4005 Meerbusch 2 | ✓ | ✓ | | |
| செல்வி. கவிதா சுந்தரலிங்கம் 5012 Bedburg/Erft | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. சோபனா சுந்தரலிங்கம் 5012 Bedburg/Erft | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. ஜெனுவா தர்மராஜா 6601 Bischmisheim/ Saar | | ✓ | ✓ | ✓ |
| செல்வி. சிந்துஜா கிருபாகரன் 6000 Frankfurt/m | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. சஜிதா சிறீபாலன் 5630 Remscheid | | ✓ | ✓ | |
| செல்வி. ஆர்த்திகா கேதீஸ்வரன் 4630 Bochum 7 | ✓ | | | |
| செல்வி. நிஷா ஜெகதீசன் 4630 Bochum 7 | ✓ | ✓ | | ✓ |
| செல்வி. ஜெயசுதா செல்வராஜா 4630 Bochum 7 | ✓ | ✓ | | |
| செல்வி. அகல்யா சோமசேகரம் 4053 Jüchen 1 | ✓ | | | |
| செல்வி. தர்ஷா கந்தசாமி 5630 Remscheid | ✓ | ✓ | | |
| செல்வி. தேனுஜா சிவானந்தராஜா 6650 Homburg/Saar | ✓ | | | |
| செல்வி. மஞ்சுளா 5204 Lohmar | | ✓ | ✓ | |
| செல்வி. சுஜீவா சண்முகரத்தினம் 5202 Hennf/Sieg | ✓ | ✓ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| செல்வி. துஷாரா கிருஷ்ணகாந்தன் 4053 Juchen 1 | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. சுவித்தா ரவீந்திரன் A.1070 Wien / Aust | ✓ | ✓ | | |
| செல்வி. கவிதா கனகராயர் 6000 Frankfurt/m | ✓ | ✓ | | |
| செல்வி. பிரியா சிவலிங்கம் 5630 Remsceid | ✓ | ✓ | | |
| செல்வி. சிரீத்தா சிறிபாலரஞ்சன் 5630 Remschei | ✓ | ✓ | | |
| செல்வன். கிறேமர் இம்மானுவேல் 5804 Wetter 4 | | ✓ | | |
| செல்வி. சுகந்தினி ஜெகதீசன் 5014 Kerpen -Horrem | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. தயாநந்தினி திருச்செல்வம் 6624 Groosrosseln 6 | ✓ | | | ✓ |
| செல்வி. நியந்தினி திருச்செல்வம் 6624 Groosrosseln 6 | | ✓ | ✓ | ✓ |
| செல்வி. சுதர்சினி சந்திரதாஸ் 5600 Wuppertal 11 | ✓ | | | ✓ |
| செல்வி. சாயினி சிதம்பரநாதன் 5630 Wuppertal 11 | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. தர்சி செல்வராஜா 5650 Solingen 19 | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. சிவதர்சினி சிவராஜா 4100 Duisburg 28 | | ✓ | ✓ | |
| செல்வி. தர்மினி நவரத்தினம் 5600 Wuppertal 11 | ✓ | ✓ | ✓ | ✓ |
| செல்வி. தமயந்தினி திருச்செல்வம் 6624 Groosrosseln 6 | ✓ | ✓ | ✓ | ✓ |
| செல்வி. தர்சினி கமலநாதன் 5650 Solingen 1 | | ✓ | ✓ | |
| செல்வி. ஜனனி அன்னராஜா 4600 Dortmund 1 | ✓ | ✓ | | ✓ |
| செல்வி. பிரியதர்சினி மனோகரன் 4600 Dortmund | | ✓ | | |
| செல்வி. கபிலினி தெய்வேந்திரன் 5650 Solingen 19 | | ✓ | ✓ | |
| செல்வி. செல்வா கந்தவனம் N.SORVAR/NORWEY | ✓ | ✓ | ✓ | |
| செல்வி. அபிராமி ரவீந்திரன் A.1070 Wien/Ausri | ✓ | | | |



www.padippakam.com
படிப்பகம்

| | கையெழுத்துப் போட்டி | வினாவிடைப் போட்டி | கதைப் போட்டி | சிக்கம் |
|---|---|---|---|---|
| செல்வி.ஷர்மி சர்வானந்தம் 5630 Remscheid | | ✓ | | |
| செல்வி.லோஜி தில்லைவாசன் 5630 Remscheid | ✓ | ✓ | | ✓ |
| செல்வி.மைதிலி மகாலிங்கம் 5142 Hückelhoven | ✓ | ✓ | | |
| செல்வி.ருபி செல்வராஜா 4630 Bochum 7 | ✓ | ✓ | | |
| செல்வி.மேகலை மகேந்திரன் 4005 Meerbusch 2 | ✓ | ✓ | | |
| செல்வி.சிந்துஜா நவரத்தினம் 4005 Meerbusch 2 | ✓ | ✓ | ✓ | |
| செல்வி.கார்த்திகா குலேந்திரன் 6653 Blieskastal | ✓ | | | |
| செல்வன்.கதம்பரத்தினம் 6603 Sulzbach | ✓ | | ✓ | |
| செல்வன்.சிவகுமார் சிவசுப்பிரமணியம் 4714 Selm | ✓ | ✓ | | |
| செல்வன். ராஜீவ் தர்மராஜா 4770 Soest | ✓ | | | ✓ |
| செல்வன்.றமேஸ் சிவசுப்பிரமணியம் 4053 Jüchen 1 | | ✓ | ✓ | |
| செல்வன்.சிவாஸ்கர் சிவராஜா 4100 Duisburg 28 | | ✓ | ✓ | |
| செல்வன்.ஜெனார்த்தஜி வேலாயுதம் 6653 Blieskastal | ✓ | ✓ | ✓ | |
| செல்வன்.ரஜீவா சிவசுப்பிரமணியம் 6000 Frankfurt/m | ✓ | | | |
| செல்வன்.துவாரகீஷ் குலேந்திரன் 6653 Blieskastal | | ✓ | | |
| செல்வன்.வினிசியாம் கிருஷ்ணகாந்தன் 4053 Jüchen 1 | ✓ | ✓ | ✓ | |
| செல்வன்.கிருஸ்ணா கனகராயர் 6000 Frankfurt/m | ✓ | ✓ | | |
| செல்வன்.விதுனன் பிரதாபராஜா 4053 Jüchen 1 | | ✓ | ✓ | |
| [illegible] | | | | |



www.padippakam.com
படிப்பகம்


www.padippakam.com

| | | | | |
|---|---|---|---|---|
| செல்வன்.அசோகன் நிர்மலராஜா 5014 KE-Horrem | ✓ | ✓ | | |
| செல்வன்.ஹரிதர்சன் கந்தசாமி 5630 Remscheid | | ✓ | | |
| செல்வன்.செந்தூரன் சுந்தரலிங்கம் 5012 Bedburg/Erft | | ✓ | ✓ | |
| செல்வன்,மாருதிதாசன் கெந்தீஸ்வரன் 5160 Dūren | ✓ | | | |
| செல்வன்.லிங்காதரன் கமலநாதன் 5650 Solingen 1 | | ✓ | ✓ | |
| செல்வன்.மயூரன் ஜெகநாதன் 4600 Dortmund | | ✓ | ✓ | |
| செல்வன்.ஜெனார்த்தன் குலம் 4053 Jüchen 1 | | ✓ | | |
| செல்வன்.செல்வரூபன் செல்லத்துரை 4630 Bochum 7 | ✓ | ✓ | | |
| செல்வன்.சிவரூபன் செல்வராஜா 5650 Solingen 19 | ✓ | ✓ | ✓ | |
| செல்வன்.அருட்குமரன் சோமசேகரம் 4053 Jũchen 1 | | ✓ | ✓ | |
| செல்வன்.பகீரதன் செல்வநாயகம் 5010 Bergheim/Erft | | ✓ | ✓ | |
| செல்வன்.நவனீரன் நவரத்தினம் 5600 Wuppertal 11 | ✓ | ✓ | ✓ | |
| செல்வன்.சுதர்சன் சண்முகரத்தினம் 5202 Hennef/Sieg | | ✓ | | |
| செல்வன்.முகுந்தன் மகேந்திரன் 5060 Bergisgladbach | ✓ | ✓ | ✓ | |
| செல்வன்.கிர்த்திபன் சத்தியசெல்வம் 6612 Schmelz | ✓ | ✓ | ✓ | |
| செல்வன்.சுமன் சந்திரேஸ்வரன் 6603 Sulzbach | ✓ | | | |
| செல்வன்.மதன் சந்திரேஸ்வரன் 6603 Sulzbach | ✓ | | | |
| செல்வன்.கஜன் தெய்வேந்திரன் 5650 Solingen 19 | | ✓ | | |
| செல்வன்.சமரன் விக்னேஸ்வரன் 5787 Olsberg | ✓ | ✓ | | |
| செல்வன்.சுகீதரன்.சண்முகரத்தினம் 5202 Hennef/Sieg | ✓ | ✓ | | |
| செல்வன்.குகதீசன் செல்வநாயகம் 5010 Bergheim/Erft | | ✓ | ✓ | |



படிப்பகம்

www.padippakam.com



சின்னப் பூனைக் குட்டிகள்
செல்லப் பூனைக் குட்டிகள்
செய்யும் குறும்பு சொல்லவோ
சிந்தை கொள்ளும் அல்லவோ

பந்தைத் துரத்திப் பிடிக்குமே
பாலை நக்கிக் குடிக்குமே
எழும்பி எழும்பிக் குதிக்குமே
எதிர்க்கும் நாயைச் சினக்குமே



பிரப்பம் கூடை தன்னையே
புரட்டிப் புரட்டிப் பார்க்குமே
நகத்தால் கீறிச் சீறுமே
நகர்ந்து பாய்ந்து ஓடுமே

வரியன் பூனைக் குட்டியோ
வந்து மடியில் ஏறுமே
குர் குர் சத்தம் போட்டுத்தான்
குறட்டை விட்டுத் தூங்குமாம்



புள்ளிப் பூனைக் குட்டியும்
புலியைப் போல இருக்குமாம்
பையப் பைய நடக்குமாம்
பயமும் வந்தால் சிலிர்க்குமாம்

புலவர் பூங்கோதை






படிப்பகம்

www.padippakam.com

# கள்வனுக்குக் கள்வன்



ஆடுகள் சில மேய்ந்து கொண்டிருந்தன. ஓநாய் ஒன்று ஆட்டு மந்தைக்குள் புகுந்தது. ஓர் ஆட்டுக் குட்டியைப் பிடித்து இழுத்து வந்தது. ஆட்டுக் குட்டியின் கத்தல் கேட்டு மற்றைய ஆடுகள் ஓடி ஒழித்துக் கொண்டன. ஆட்டுக் குட்டியை ஓநாய் இழுத்து வரும் போது வழியில் சிங்கம் ஒன்று வந்தது.

ஓநாயிடம் இருந்த ஆட்டுக் குட்டியைச் சிங்கம் பறித்தது. இந்த ஆட்டுக் குட்டி என்னுடையதென்று ஓநாய் சொன்னது. அதற்குச் சிங்கம் சிரித்துக் கொண்டு ''இந்த ஆட்டுக் குட்டி உன்னுடையதா? இந்த ஆட்டுக் குட்டிக்கு உரியவர் யாரோ, மற்றவர்களுக்கு உரிமையானதை நீ அபகரிக்கலாம் என்றால்?.. உனக்குச் சொந்தம் இல்லாததை உன்னிடமிருந்து நான் அபகரிப்பதில் தவறில்லையே! என்று சிங்கம் சொன்னது.

ஓநாயால் எதுவும் சொல்ல முடியவில்லை. யோசித்துக் கொண்டு நின்றது. கள்வனுக்குக் கள்வன் உலகில் உண்டு என்று சொல்லிக் கொண்டு சிங்கம் ஆட்டுக் குட்டியைச் சாப்பிடத் தொடங்கியது.



படிப்பகம்

www.padippakam.com



# எண்ணம்




முயல்கள் ஒருநாள் ஓரிடத்தில் கூடின. எதைக் கண்டாலும் பயந்தோடும் தங்களின் நிலையைப் பற்றிப் பேசிக் கொண்டன. இத்தகைய பயந்து வாழும் வாழ்க்கையை விடச் சாவதே மேலானதென்று முயல்கள் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்தன.

இதன்படி எல்லா முயல்களும் மலை உச்சியில் ஏறி அங்கிருந்து விழுந்து இறப்பதாக மலையில் ஏறிக் கொண்டிருந்தன. முயல்களின் சத்தம் கேட்டுத் தவளைகள் பயந்து ஓடி ஒழித்தன. இதனைக் கண்ட முயல்கள் யோசித்தன. எம்மை விடப் பயந்து வாழுபவர்கள் இருக்கும் போது நாங்கள் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்? முயல்கள் தமது இறக்கும் யோசனையைக் கை விட்டுத் திரும்பி விட்டன.

www.padippakam.com

# கழுகு




கழுகுகளை வானத்தின் அரசர்கள் என்று சொல்லுவார்கள். கழுகு வேட்டையாடி இரை பிடிக்கும் இனத்தைச் சேர்ந்தது. இரையைத் தேடிப் பிடிப்பதில் தனித் தன்மை வாய்ந்தது. மிக உயரத்திலும் அதே நேரத்தில் வேகமாகவும் பறக்கும் தன்மை வாய்ந்தது. உறுதியும் வலிமையும் திறமையும் ஒன்றாக அமையப் பெற்ற சின்னமாகக் கழுகு திகழ்கின்றது.

புராணங்களில் கடவுளின் ஆயுதமான இடியை எடுத்துச் செல்லும் பறவையாக இது கருதப்படுகின்றது. ரோமர்களின் வெற்றிச் சின்னமாகக் கழுகு இருந்தது. பிரான்ஸ் நாட்டு நெப்போலியன், ரஷ்ஷியாவின் ஜார், ஜேர்மனியின் கிட்லர் எல்லோரும் கழுகையே தத் தமது நாட்டின் தேசிய சின்னமாகக் கொண்டனர். இன்றும் ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனி ஆஸ்த்திரியா போலந்து போன்ற பல நாடுகளின் சின்னமாகக் கழுகு விளங்குகின்றது. *



படிப்பகம்


# திருடனும் நாயும்



திருடன் ஒருவன் திருடுவதற்காக ஒரு வீட்டினுள் நுழைந்தான். திருடனின் காலடிச் சத்தம் கேட்டதும் நாய் குரைத்துச் சத்தம் போட்டது. நாயைச் சமாளிக்கத் தான் கொண்டு வந்த எலும்புத் துண்டை நாய்க்குப் போட்டான். நாய் திருடனின் தந்திரத்தைப் புரிந்து கொண்டது.

''சதையில்லாத இந்த எலும்புத் துண்டிற்கு நான் மயங்க மாட்டேன். இதற்கு மயங்கி எனது எசமானுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்'' என்று நாய் திருடனுக்குச் சொன்னது. நாயின் சத்தம் கேட்டு எசமான் வெளியே வந்தார். திருடன் ஓடிச் சென்று விட்டான்.


# ஆசையால் வந்த அவலம்



இறைச்சிக் கடை வாசலில் நாய் ஒன்று நெடு நேரமாகக் காத்து நின்றது. இறைச்சிக் கடைக்காரன் இறைச்சியின் கழிவுகளை வெளியே வீசினான். அதற்குள் நல்ல இறைச்சித் துண்டும் இருந்தது. நாய்க்கு அதைக் கண்டதும் வாய் ஊறியது.

பாய்ந்து சென்று நல்ல இறைச்சித் துண்டைக் கவ்வி எடுத்தது. ஓட்டமும் நடையுமாகத் தனது இருப்பிடத்திற்குச் சென்று கொண்டிருந்தது. வழியில் ஆற்றின் மீது பாலம் இருந்தது. பாலத்தை எட்டிப் பார்த்தது. தண்ணீருக்குள் வேறொரு நாய் பெரிய இறைச்சித் துண்டுடன் நிற்பது தெரிந்தது. இந்தப் பெரிய இறைச்சித் துண்டைப் பறித்து விட வேண்டும் என்று நாய் எண்ணியது. ஆற்றினுள் பாய்ந்தது. நாயையும் காணவில்லை. இறைச்சித் துண்டும் இல்லை. இருந்த இறைச்சித் துண்டும் ஆற்றில் அடித்துச் செல்லப் பட்டது.

www.padippakam.com



தண்ணீருக்குள் நாய் எப்படி இருக்கும்? நாய்க்கு இருந்ததையும் இழந்த பின்னரே புத்தி வந்தது. கையில் இருப்பதை விட்டுப் பேராசை கொண்டால் இது தான் கதி என்று இந்தக் கதை எமக்கு அறிவுரை சொல்லுகின்றதல்லவா? ✳

*** 394-ஆம் ஆண்டு முதல் நடைபெறாத ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 1896-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன.
*** ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் ஒரே ஒரு தடவை ஜேர்மனி முதலாவது இடத்தைப் பெற்றது. அதுவும் 1936-ஆம் ஆண்டு பேர்லினில் நடைபெற்ற போட்டிகளில்.

*** 394-ஆம் ஆண்டில் வீரர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு யுத்தமாக மாறியது. பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது. கிரேக்கப் பேரரசன் தியோடா சியஸ் இந்த விளையாட்டுப் போட்டியை முற்றும் முழுதாகத் தடை செய்தான்.




படிப்பகம்

# எல்லோர்க்கும் ஒன்றேனிதாம்

## எல்லோரிடமும் ஏதோ ஒரு திறமை இருக்கும்

காட்டுராஜாவான சிங்கம் தனது படைகளுடன் சண்டைக்கு ஆயத்தமானது. தனது படையிலுள்ள மிருகங்களை ஆயுதங்களுடன் வருமாறு கட்டளை அனுப்பியது. சிங்கத்தின் மந்திரிகளுக்கு கழுதையையும் முயலையும் படையில் சேர்த்துக் கொள்வது விருப்பம் இல்லை. தமது விருப்பத்தைச் சிங்கராஜாவிடம் சொன்னார்கள். கழுதையும் முயலும் எந்த ஒரு காரியத்தையும் ஒழுங்காகச் செய்ய மாட்டா. படைகளிற் சேர்த்தால் குறும்பும் குழப்படியுமாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லின.



சிங்கம் தனது மந்திரிகளைப் பார்த்து ''கழுதையின் குரல் எனது குரலை விடச் சத்தமாகக் கேட்கும். படையில் அணிவகுத்துச் செல்லும் போது குரல் கொடுப்பவனாகக் கழுதையை நியமிக்கலாம். முயலைப் போல வேகமாக என்னால் ஓட முடியாது. உங்களாலும் முடியாது. முயலைத் தூதுவனாக நியமிக்கலாம் என்று சிங்கம் சொன்னது.

எல்லோரிடம் ஒவ்வொரு விதமான திறமைகள் இருக்கின்றன. அவற்றை உரிய வழியில் பயன்படுத்துவது நல்லது. திறமை இல்லாதவர் இயலாதவர் என்று உலகில் யாருமே இல்லை.
''எல்லோர்க்கும் ஒன்றெளிதாம்''

*

## சுறா மீன்

==========

சுறாமீன் கறி என்றவுடன் பலருக்கு நாக்கில் நீர் ஊறும். இச்சுறாக்கள் மீன் இனத்தைச் சேர்ந்ததாக நம்மில் பலர் எண்ணிக் கொள்கிறோம். சுறா முள்ளந் தண்டுள்ள ஒரு கடற் பிராணியே ஆகும். இது மீனைப் போல தோற்றத்தைக் கொண்டிருப்பதால் இதை மீன் என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். சுறாக்களில் பல வகை உண்டு. சுறாக்கள் இயற்கையில் மிகவும் சாதுவானவை. சில சுறாக்கள் சினேக மனப்பாங்கு கொண்ட வையாகவும் உள்ளன. ஆனாலும் கோபம் கொண்டு விட்டால் எதிர்க்கும். இவை உண்மையில் நல்ல குழந்தைகளே.

இந்து சமுத்திரத்திலும், கலிபோனியா. அவுஸ்திரேலியா, நிக்கிரகூவா போன்ற இடங்களில் வாழும் சுறாக்கள் மிகவும் மூர்க்கமானவை

www.padippakam.com

# மன்னர் சாலமன்

மன்னர் சாலமன் சிறந்த அறிஞராக மதிக்கப் படுகின்றார். இவர் அறிஞராக இருப்பதற்குப் பலவிதமான கதைகள் சொல்லப்பட்டு வருகின்றன. அவற்றில் இதுவும் ஒன்று.

ஒரு நாள் மன்னர் சாலமன் காட்டிற்குச் சென்றார். அங்கே இரண்டு பாம்புகள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். ஒன்று கருநாகம், மற்றது வெள்ளை நாகம். சாலமனுக்கு வெள்ளைப் பாம்பின் மீது இரக்கம் வந்தது. கருநாகம் தனது கொடிய விசத்தை வெள்ளைப் பாம்பின் மீது செலுத்த முயன்றது. அப்போது சாலமன் தனது வாளினால் கருநாகத்தை வெட்டி வீழ்த்தினார். வெள்ளை நாகம் தப்பிச் சென்றது.

சில நாட்களின் பின்னரும் மன்னர் சாலமன் காட்டிற்கு வந்தார். அவர் எதிரே அரக்கன் போன்ற பயங்கரத் தோற்றமான ஒருவன் தோன்றினான். அரசே, என்னைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டாம். நான் உங்கள் கருணையால் காப்பாற்றப் பட்ட வெள்ளைப் பாம்பு. கருநாகம் எனது எதிரி. நான் பாம்பாக மாறித் தப்பி வாழ லாம் என வெள்ளைப் பாம்பாக மாறினேன். எனது எதிரியும் கருநாகமாக மாறினான். எனது எதிரி என்னைக் கொல்லப் போகும் வேளையில் என்னைக் காப்பாற்றினீர்கள்.

www.padippakam.com



உங்களுக்குப் பரிசளிக்க விரும்புகின்றேன். தங்கமா? நீண்ட ஆயுளா? எது தேவை என்று கேட்டது.

என்னிடம் ஏராளமான செல்வம் இருக்கின்றது. அதனால் எனக்குத் தங்கம் தேவையில்லை. இரண்டாவதாகச் சொன்ன நீண்ட ஆயுள் மருத்துவருக்குத்தான் வேண்டும். அவர் நீண்ட ஆயுளுடன் இருந்தால் மற்றவர்களைக் காப்பாற்றுவார், என்று சாலமன் சொன்னார்.

நீங்கள் எதையாவது என்னிடம் பெற்றே ஆக வேண்டும் என்று அவன் வற்புறுத்தினான். அப்போதுதான் மன்னர் சாலமன் எனக்கு அறிவு வேண்டும் என்று கேட்டார். அறிவை நீ ஏராளமாகப் பெறுவாய் என்று அவன் வாழ்த்தி மறைந்தான். அன்று முதல் மன்னர் சாலமன் அறிஞராக எல்லோருக்கும் நீதி வழங்கிக் கொண்டு வந்தார். ✱



படிப்பகம்

www.padippakam.com



# காகமும் நத்தையும்



ஒரு நத்தையைக் காகம் ஒன்று தூக்கி வந்தது. நத்தை ஓடாக இருந்தபடியால் அதைக் காகத்தினால் உடைக்க முடியவில்லை. இதை கிழட்டுக் காகம் கவனித்தது. நத்தை ஓட்டை உடைக்க அது யோசனை சொன்னது.

''இப்படி உடைத்தால் நத்தையை உடைக்க மாட்டாய்! உயரத்திலிருந்து போட்டால் தான் நத்தை உடையும். நத்தையைத் தூக்கிக் கொண்டு மேலே போய்ப் போடு, நத்தை உடைந்து விடும், பிறகு தின்னலாம்'' என்றது. நத்தையுடன் மேலே பறந்த மற்றக் காகம் நத்தையைக் கீழே போட்டது. நத்தை கீழே விழுந்ததும் உடைந்தது. மேலேயிருந்து காகம் கீழே வருவதற்கு முன்னர் கிழட்டுக் காகம் நத்தையைக் கொத்திக் கொண்டு பறந்து சென்றது. ✳

செல்வி.நிஷா ஜெகதீசன்
5630 Bochum 7



படிப்பகம்

## போட்டி

### விடுகதை விருந்து

1) பலர் கட்டிய வீடு ஒருவன் கண் பட்டு உடைந்ததாம். அது என்ன?

2) பிறக்கும் போது வாலுண்டு. இறக்கும் போது வாலில்லை அது என்ன?

3) தவழும் போது ஒரு பெயர். விழும் போது ஒரு பெயர். உருளும் போது ஒரு பெயர். அது என்ன?

4) காலை மாலை நெட்டை. மற்ற நேரம் குட்டை அது என்ன?

5) கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கல். அது என்ன?

### விடுமுறைச் சிறப்பிதழ்

------------------------ முழுவதும் உங்களுடைய ஆக்கங்களினால் வெளி வர இருக்கும் விடுமுறைச் சிறப்பிதழ் போதியளவு ஆக்கங்கள் வந்து சேராததால் தாமதமாகின்றது. உடனடியாக ஆக்கங்களை அனுப்புவதன் மூலம் விடுமுறைச் சிறப்பிதழை ''விழாச் சிறப்பிதழாக வெளியிட முடியும். தயவு செய்து ஆக்கங்களைத் தாமதியாமல் அனுப்பி வைக்கவும். படங்களைக் கறுப்பு நிறத்தில் வரைந்து அனுப்பவும்.

## வினாவிடைப் போட்டி ஆவணி 92

1) ஒலிம்பிக்ஸ் 92 விளையாட்டுப் போட்டிகள் நடந்து முடிந்து விட்டன. இந்த விளையாட்டுக்கள் முதன் முதலில் எந்த நாட்டில் நடைபெற்றன?

2) பைபிள் எனப்படும் கிறிஸ்த்தவ மத நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

3) தாஜ்மகால் எந்த நாட்டிலுள்ளது? அந்த நாட்டின் தலைநகரின் பெயர் என்ன?

4) வன்னி என்றதும் ஓர் அரசனின் பெயர் ஞாபகத்திற்கு வரும். அந்த அரசனின் பெயர் என்ன?

5) பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்து எழுதுக.
அ) குயில் கூவும் என்பது போல மயில்.....
ஆ) கோழி கொக்கரிக்கும் என்பது போல ஆந்தை
இ) பசுவின் எதிர்பாற்சொல் எருது என்பது போல மறியின் எதிர்பாற் சொல்
ஈ) சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல யானை
உ) ஆட்டின் இளமைப் பெயர் குட்டி என்பது போல அணிலின் இளமைப் பெயர்

6) அங்காடி என்பது எதைக் குறிக்கின்றது?

விடைகளை உங்கள் கையெழுத்தில் எழுதி செப்டம்பர் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் சிறுவர் அமுதம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முடிவு திகதி 5.9.92

# குறுக்கெழுத்துப் போட்டி இல 3

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 3( ஆவணி92)

அடைக்கப்பட்டுள்ள சதுரங்கள் : 6 10 13 16 19 26 27 28 31 32 39 41 46

குழம்பியுள்ள சொற்கள் : 43 (கி.வ) 4 (மே.கீ) 23 (மே.கீ)

மாறியுள்ள சொற்கள் என்பது இடமிருந்து வலமாக உள்ள சொற்கள் வலமிருந்து இடமாக என்றும், மேலிருந்து கீழாக வரும் சொற்கள் கீழிருந்து மேலாக என்றும் குறிப்பிடுவதாகக் கொள்ளவும்.

இடமிருந்து வலமாக வரும் சொற்கள் :

1) இந்த வகை மிருகம் வீட்டு மிருகமாகவும் காட்டு மிருகமாகவும் உள்ளது. இங்கே காட்டு மிருகத்தையே குறிக்கின்றது.

8) மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐந்தும் ஐம்புலன்கள் எனப்படும். இவற்றில் ஒன்று மாறி இருக்கின்றது.

11) எருது என்பதன் எதிர்பாற் சொல்

17) நோவு எரிவு போல இதுவும் ஒன்று. படகோட்டிகள் துடுப்பினால் தண்ணிரை இப்படிச் செய்தாலே படகு தண்ணீரில் ஓடும். (மாறி இருக்கின்றது)

20) பசுவை இப்படியான மிருகம் என்றே சொல்லுகின்றோம்.

22) ஒன்பதை நாலால் வகுத்தால்(பிரித்தால்) இரண்டு தரம் (முறை) வந்தாலும் ஒன்று மிகுதியாக உள்ளது. இந்த ஒன்றை இப்படிச் சொல்ல வேண்டும்.

29) மாட்டுப்பண்ணை ஆட்டுப்பண்ணையில் கிடைக்கும் இதைப் பசளையாகப் பயன்படுத்தலாம். இந்தியாவில் எரி பொருளாகவும் பயன் படுத்துகின்றனர். (மாறியுள்ளது)

33) இதிலிருந்தே நூல் பெறப்படுகின்றது.

36) யாராவது மறியலுக்குப் போனால் இதை எண்ணப் போனதாகக் கேலியாகச் சொல்வதுண்டு.

43) இதில் நூறு சேர்ந்தால் ரூபாவாகிவிடும். இங்கு குழம்பியுள்ளது.

47) கண்ணாடி போல பளபளக்கும். மிக நீண்ட காலத்திற்கு முன்னர் நிலத்தினுள் புதையுண்டு போன நிலக்கரி, மரங்கள் இப்படி மாறியதாக நம்பப்படுகின்றது.

மேலிருந்து கீழாக வரும் சொற்கள் :

1) இது காட்டு மிருகம். இதை ஜேர்மன் மொழியில் மூக்கில் கொம்புள்ள மிருகம் என்று சொல்லப்படுகின்றது.

2) கண்ணுக்குப் புலனாவதை கண்புலன் என்று சொல்வதில்லை. கண்ணுக்குப் பதிலாக இதைச் சேர்த்தெழுத வேண்டும். (மாறி)

4) குழந்தை பிறந்து வளர்ந்து முதுமை அடையும் வரை இதில் பல நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது. காலம் நேரம் என்ற பொருளிலும் வரும். (குழம்பியுள்ளது)

5) பளு,பாரம், பொறுப்பு என்று பல பொருளில் வரும். சுமைதாங்கியுடன் தொடர்புடையது. (மாறி)

7) இடது என்பதன் எதிர்ச் சொல்.

17) அரிசியில் கல் மண் இருந்தால் கழுவும் போது இப்படிச் செய்ய வேண்டும். இதைச் செய்யச் சலிப்புத் தேவையில்லை. (மாறி)

www.padippakam.com

23) கழுகின் இது பட்டால் பச்சை மரமும் பட்டுப் போய் விடும். மிச்சத்தையும் இப்படிச் சொல்லலாம். (குழம்பியுள்ளது)

33) கடலைக் குறிக்கும் ஒத்த கருத்துச் சொல்.

35) வருத்தமில்லை. நலம் என்று பொருள்

38) உறவு முறையில் இளையவனைக் குறிக்கும் இந்தச் சொல் கீழிருந்து மேலாக நடு எழுத்தில்லாமல் இருக்கின்றது.

இந்த இதழில்(ஆவணி92) காணப்படும் வினா விடைப் போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி, விடுகதைப் போட்டி, புதிர் எல்லாவற்றினதும் முடிவு திகதி 5,9,92. முடிவு திகதி வரை காத்திராமல் கூடியவரை நேரத்தோடு அனுப்பி வைக்கவும்.


சிறுவர்அமுதம் தொடர்பான சகல தொடர்புகளுக்கும்,

SINNA RAJESWARAN
Red..SIRUVAR AMUTHAM
IM WINKEL -2
W.5013 ELSDORF/Rhld



படிப்பகம்

www.padippakam.com



SIRUVAR **AMUTHAM** No 32

சிறுவர் அமுதம்

Tel..02271/66527

இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழைவளம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை தென்னை பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடே

---

தொடர்புகளுக்கு:
SIRUVAR AMUTHAM
IM WINKEL – 2,
5013 ELSDORF/RHLD
GERMANY

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

**KINDERFREUNDLICHES MAGAZIN**

Amu 3

படிப்பகம்